**செய்தி வெளியீடு எண் :1096** **நாள்: 02.07.2022**

**செய்தி வெளியீடு**

கருவூலம் மற்றும் கணக்குத்துறை

அரசாணை நிலை எண்.136 நிதி (ஓய்வூதியம்)த்துறை நாள் 20-05-2022 ன்படி தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களுக்கு இணையதள மின்னணு வாழ்நாள் சான்று பதிவு செய்து ஆண்டு நேர்காணல் 01-07-2022 முதல் துவங்கப்பட்டது. ஓய்வூதியர்களின் இருப்பிடத்திற்கு சென்று இணையதள மின்னணு வாழ்நாள் சான்று வழங்கும் சேவையை இந்திய அஞ்சல் வங்கி தபால்துறை பணியாளர்கள் மூலமாக செய்து வருகிறது. 01-07-2022 அன்று மட்டும் 14,760 ஓய்வூதியர்களுக்கு இணையதள வாழ்நாள் சான்று பதிவு செய்து ஆண்டு நேர்காணல் செய்யப்பட்டுள்ளது இதில் 1837 ஓய்வூதியதாரர்களுக்கு தபால் துறை ஊழியர்கள் ஓய்வூதியதாரர்களின் இருப்பிடத்திற்கு சென்று இனையதள வாழ்நாள் சான்று பதிவு செய்து நேர்காணல் செய்யப்பட்டுள்ளது. .

இ-சேவா , பொது சேவை மையங்களிலும் மின்னணு வாழ்நாள் சான்று பதிவு செய்து 2022 ம் ஆண்டிற்கான ஓய்வூதியதாரர்கள் ஆண்டு நேர்காணல் செய்யப்படுகிறது.

இணையதள மின்னணு வாழ்நாள் பதிவு செய்த அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் வாழ்நாள் சான்று பதிவு செய்த 3 நாட்களுக்குள் ஓய்வூதியதாரர்கள் கருவூலத்தில் அளித்துள்ள கைபேசி எண்ணிற்கு வாழ்நாள் சான்று ஏற்றுக்கொள்ளப்பட்டது தொடர்பான குறுஞ்செய்தி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. **எனவே ஓய்வூதியர்கள் மேற்கண்ட முறையில் இனையதள வாழ்நாள் சான்று பதிவு செய்து ஆண்டு நேர்காணல் செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in